भारत का राजपत्र

# The Gazette of India

இந்திய அரசிதழ்

असाधारण

**EXTRAORDINARY**

சிறப்பிதழ்

भाग XV अनुभाग 1

**Part XV Section 1**

பகுதி XV பிரிவு 1

प्रधिकार प्राकाशित

**PUBLISHED BY AUTHORITY**

அதிகாரத்துடன் வெளியிடப்பட்டது.

नई दिल्ली, सोमवार, 23 नवंबर, 1992/1914 शक

New Delhi, Monday, 23rd November 1992

*புது தில்லி, 1992ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 23ஆம் தேதி, திங்கட்கிழமை*

## Ministry of Law, Justice and Company Affairs

(Law Department)

New Delhi, the 23rd November 1992

*சட்ட, நீதி மற்றும் நிறும அலுவல்கள் அமைச்சகம்*

*(சட்டத்துறை)*

*புது தில்லி, 23, நவம்பர் 1992*

The translation in Tamil of the Scheduled Castes and Scheduled Tribes (Prevention of Atrocities) Act, 1989 (33 of 1989), The All-India Services Act, 1951 (61 of 1951), The Dowri Prohibition Act, 1961 (28 of 1961), The explosive Substances Act, 1908 (6 of 1908), The President (Discharge of Functions) Act, 1969 (16 of 1969), The Government Savings Certificates Act, 1959 (46 of 1959), The Weekly Holidays Act, 1942 (18 of 1942) and The Hindu Adoptions and Maintenance Act, 1956 (78 of 1956) are hereby published under the authority of the President and shall be deemed to be the authorised translations thereof in Tamil under clause (*a*) of section 2 of the Authoritative Texts (Central Laws) Act, 1973 (50 of 1973).

*பட்டியலில் கண்ட சாதியினர் மற்றும் பட்டியலில் கண்ட பழங்குடியினர் (வன்கொடுமைத் தடுப்புச்) சட்டம், 1989 (33/1989), அனைத்திந்தியப் பணிகள் சட்டம், 1951 - (61/1951), மணக்கொடைத் தடுப்புச் சட்டம், 1961 (28/1961), வெடிபொருள்கள் சட்டம், 1908 (6/1908), குடியரசுத் தலைவர் (பதவிப் பணிகளை ஆற்றுதல்) சட்டம், 1969 (16/1969), அரசாங்கச் சேமிப்பு பத்திரங்கள் சட்டம், 1959 (46/1959), வார விடுமுறை நாட்கள் சட்டம், 1942 (18/1942) மற்றும் இந்து மகவேற்புகள் மற்றும் வாழ்க்கைப் பொருளுதவிச் சட்டம், 1956 (78/1956) ஆகியவற்றின் தமிழாக்கங்கள் குடியரசுத் தலைவரின் அதிகாரத்தின்படி இதன் மூலம் வெளியிடப்படுகின்றன. அதிகாரவுரிமைப்படியான வாசகங்கள் (மையச் சட்டங்கள்) சட்டம், 1973 (50/1973)இன் பிரிவு 2இன் கூறு (அ)—வின் கீழ் இவையே தமிழில் அதிகாரமுறை மொழிபெயர்ப்புகளாகக் கருதப்படுதல் வேண்டும்.*

## வார விடுமுறை நாட்கள் சட்டம், 1942.

(சட்ட எண் 18/1942)

[1942, ஏப்ரல் 3]

கடைகள், உணவுச் சாலைகள் மற்றும் கலை அரங்குகளில் அமர்த்தப்பெற்ற நபர்களுக்கு வார விடுமுறை நாட்கள் வழங்குவதற்கு வகைசெய்வதற்கான சட்டம்.

கடைகள், உணவுச்சாலைகள் மற்றும் கலை அரங்குகளில் அமர்த்தப்பெற்ற நபர்களுக்கு வார விடுமுறை நாட்கள் வழங்குவதற்கு வகை செய்வது உகந்ததாக இருப்பதால், ஈங்கிதனால் பின்வருமாறு சட்டமியற்றப்படுகிறது :—

குறுந்தலைப்பு அளாவுகை மற்றும் தொடக்கம்.

1. (1) இந்தச் சட்டம், வார விடுமுறை நாட்கள் சட்டம், 1942 என்று வழங்கப்பெறும்.

(2) இது இந்தியா முழுவதையும் அளாவி நிற்கும்.

(3) இது, மாநில அரசாங்கம் அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாகப் பணித்த பின்பு மட்டுமே, அந்த மாநிலத்தில் அல்லது மாநிலத்திலுள்ள குறித்துரைக்கப்பட்ட ஒரு வரையிடத்தில் செல்லாற்றல் பெறும்.

பொருள் வரையறைகள்.

2. இந்தச் சட்டத்தில், பொருள் குறித்து அல்லது தறுவாய் குறித்து முரண்பாடாக எதுவும் இருந்தாலன்றி,—

(அ) '' நிறுவனம் '' என்பது, கடை, உணவுச் சாலை அல்லது கலை அரங்கம் என்று பொருள்படும் ;

(ஆ) '' நாள் '' என்பது, நள்ளிரவில் தொடங்கி இருபத்து நான்கு மணி நேரங்களைக் கொண்ட காலஅளவு என்று பொருள்படும் ;

(இ) '' உணவுச் சாலை '' என்பது, பொதுமக்களுக்கு அல்லது பொதுமக்களின் ஒரு பிரிவினருக்கு உண்பதற்காக உணவு அல்லது சிற்றுண்டிகளை வழங்கும் தொழில் முதன்மையாகவோ, முழுமையாகவோ நடத்தப்படும் வளாகம் என்று பொருள்படும்; ஆனால், அது கலை அரங்குடன் இணைக்கப்பட்டுள்ள உணவுச் சாலையை உள்ளடக்காது;

(ஈ) '' கடை '' என்பது, முடிவெட்டுநர் அல்லது முடிதிருத்துநரின் தொழில் மற்றும் ஏலத்தின்மூலம் சில்லறை விற்பனை உள்ளடங்கலாக, ஆனால், கலை அரங்குகளில் செய்யப்படும் நிகழ்ச்சிப் பட்டியல்கள், விவரப்பட்டியல்களின் விற்பனை மற்றும் அவற்றைப் போன்ற விற்பனை நீங்கலாக, சில்லறை வாணிகம் அல்லது தொழில் எதுவும் நடத்தப்படும் வளாகம் எதனையும் உள்ளடக்கும்;

(உ) '' கலை அரங்கம் '' என்பது, முதன்மையாகவோ முழுமையாகவோ திரைப்படங்கள், நாடக நிகழ்ச்சிகள் அல்லது மேடைக் கேளிக்கைகள் காண்பித்தலுக்கென உள்ள வளாகம் எதனையும் உள்ளடக்கும் ;

(ஊ) '' வாரம் '' என்பது, சனிக்கிழமை நள்ளிரவில் தொடங்கி ஏழுநாட்களைக்கொண்ட கால அளவு என்று பொருள்படும்.

கடைகளை மூடி வைத்தல்.

3. (1) ஒவ்வொரு கடையையும் வாரத்தில் ஒருநாள் முழுமையாக மூடி வைத்தல்வேண்டும் ; கடைக்காரரால் குறித்துரைக்கப்படும் அந்த நாள் பற்றிய அறிவிப்பு, கடையில் தெளிவாகத் தெரிகிற இடத்தில் நிலையாகக் காட்சிக்கு வைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(2) அவ்வாறு குறித்துரைக்கப்படும் நாள், வேண்டுமாயின், மூன்று மாதங்களுக்கு ஒருமுறையன்றி, கடைக்காரரால் அடிக்கடி மாற்றப்படுதல் ஆகாது.

கடைகள் உணவுச் சாலைகள் மற்றும் கலை அரங்குகளின் வார விடுமுறை நாட்கள்.

4. கடை, உணவுச் சாலை அல்லது கலை அரங்கம் இவற்றில் நம்பகப் பணியில் அல்லது மேலாண்மைப்பணியில் அல்லாமல் பிறவாறு பணிபுரியும் நபர் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு வாரத்திலும் ஒரு முழுநாள் விடுமுறை நாளாக அனுமதிக்கப்படுதல் வேண்டும் ;

வரம்புரையாக : வாரம் ஒன்றில் நபர் ஒருவர் பணியில் இருந்த மொத்தக் காலஅளவு, அதிகாரமளிக்கப்பட்ட விடுப்பில் இருந்த நாட்கள் உள்ளடங்கலாக, ஆறு நாட்களுக்குக் குறைவாக இருக்குமிடத்து, அந் நபருக்கு இந்தப் பிரிவில் உள்ள எதுவும் பொருந்துறுவதில்லை; ஒருகடையில் அமர்த்தப்பெற்ற நபர், பிரிவு 3 இன்படி கடை மூடிவைக்கப்பட்டிருக்கும் நாளில் முழுவிடுமுறை அனுமதிக்கப் பெற்றுள்ளவிடத்து, அந்த நபர் கூடுதல் விடுமுறை நாள் பெறுவதற்கு இந்தப் பிரிவில் உள்ள எதுவும் அவரை உரிமைகொண்டவராக ஆக்குவதில்லை.

கூடுதல் அரை நாள் மூடுகை அல்லது விடுமுறை.

5. (1) கடைகளைப் பொறுத்தோ குறித்துரைக்கப்படும் கடைகளின் வகை எதனையும் பொறுத்தோ, பிரிவு 3 இல் வகைசெய்யப்பட்டுள்ள நாளுக்குக் கூடுதலாக ஒவ்வொரு வாரத்திலும் ஒருநாள் பிற்பகலில் மாநில அரசாங்கத்தால் குறிக்கப்படும் நேரத்தில் அவை மூடியிருத்தல் வேண்டும் என்றும், கலை அரங்குகள் மற்றும் உணவுச்சாலைகள் அல்லது இரண்டில் ஏதொன்றிலும் அல்லது இரண்டின் தொடர்பாகக் குறித்துரைக்கப்படும் வகை எதனையும் பொறுத்து, அவற்றில் நம் பகப்பணியிலோ, மேலாண்மைப் பணியிலோ அல்லாமல் பிறவாறு பணியில் அமர்த் தப்பெற்ற நபர் ஒவ்வொருவரும், வாரம் ஒவ்வொன்றிலும் பிற்பகலில் மாநில அரசாங்கத்தால் குறிக்கப்படும் நேரத்தில் தொடங்கும் அரைநாள் கூடுதல் விடுமுறை நாளாக அனுமதிக்கப்படவேண்டும் என்றும் மாநில அரசாங்கம், அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாக வேண்டுறுத்தலாம்.

(2) இந்தப் பிரிவினைப் பொறுத்தவரை, வெவ்வேறு கடைகளுக்கு அல்லது கடைகளின் வெவ்வேறு வகைகளுக்கு அல்லது வெவ்வேறு வரையிடங் களுக்கு அல்லது ஆண்டின் வெவ்வேறு காலங்களுக்கு மாநில அரசாங்கத்தால் வெவ்வேறு நேரங்கள் குறிக்கப்படலாம்.

(3) உட்பிரிவு (1)இன் வேண்டுறுத்தத்தைத் தொடர்ந்து வாரநாள் ஒன்றில் கடை மூடப்படுமாயின், கடைக்காரரால் குறித்துரைக்கப்படும் அந்த நாள் பற்றிய அறிவிப்பு கடையில் தெளிவாகத்தெரிகிற இடத்தில் நிலையாகக் காட்சிக்கு வைக்கப்பட்டிருத்தல் வேண்டும்; மேலும், அந்த நாள், வேண்டுமாயின், அந்தக் கடைக்காரரால் மூன்று மாதங்களுக்கு ஒரு முறையன்றி, அடிக்கடி மாற்றப்படுதல் ஆகாது.

ஊதியத்திலிருந்து கழித்தலோ குறைத் தலோ ஆகாது.

6, பிரிவுகள் 3, 4, 5 ஆகியவற்றிற்கிணங்க, இந்தச் சட்டம் பொருந் துறுகிற நிறுவனம் மூடப்பட்டுள்ள அல்லது விடுமுறை அனுமதிக்கப்பட்டுள்ள நாள் அல்லது நாளின் பகுதியைப் பொறுத்து அந்நிறுவனத்தில் பணிபுரியும் நபர் எவரின் ஊதியத்திலும் கழித்தலோ குறைத்தலோ செய்யப்படுதல் ஆகாது ; மேலும் அத்தகைய நபர் அந்த நாள் அல்லது அந்த நாளின் பகுதி பொறுத்து வழக்கமாக ஊதியம் பெறுவதில்லை என்ற அடிப்படையில் அமர்த்தப் பெற்றிருப்பினும், அந்த நாள் அல்லது அந்த நாளின் பகுதி பொறுத்து, அந்த நிறுவனம் மூடப்படாமலோ விடுமுறை நாள் அனுமதிக்கப்படாமலோ இருந்திருந்தால், அந்த நாள் அல்லது அந்த நாளின் பகுதி பொறுத்து, அவர் என்ன ஊதியம் பெற்றிருப்பாரோ அந்த ஊதியம் அவருக்குக் கொடுக்கப்படுதல் வேண்டும்.

ஆய்வாளர்கள்.

7. (1) மாநில அரசாங்கம், அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாக, இந்தச் சட்டத்தின் நோக்கங்கள் குறித்து ஆய்வாளர்களை, அவர்கள் ஒவ்வொருவருக்கும் குறித்தளிக்கப்படும் வட்டார எல்லைக்கென அமர்த்தலாம்.

(2) இந்தப் பிரிவின்படி அமர்த்தப்பெற்ற ஆய்வாளர் ஒவ்வொருவரும், இந்தியத் தண்டனைத் தொகுப்புச் சட்டத்தின் (45/1860) பிரிவு 21இன் பொருளின் படி அரசுப்பணியாளர் என்று கொள்ளப்பெறுவார்.

ஆய்வாளர்களின் அதிகாரங்கள்.

8. (1) மாநில அரசாங்கத்தால் இதற்கென வகுக்கப்பட்ட விதிகள் எவற்றுக்கும் உட்பட்டு, ஆய்வாளர் ஒருவர், அவர் அமர்த்தப்பெற்ற வட்டார எல்லைகளுக்குள்—

(அ) அவர் பொருத்தமெனக் கருதினால், அரசாங்கப்பணியாளர்களாக இருக்கிற உதவியாளர்கள், எவரேனும் இருப்பின், அவர்களுடன் இந்தச் சட்டம் பொருந்துறுகிற நிறுவனம் எதற்குள்ளும் நுழையலாம் மற்றும் அங்கு இருக்கலாம் ;

(ஆ) அத்தகைய நிறுவனம் எதனையும் மற்றும் பிரிவு 10இன் உட் பிரிவு (2)இன் கூறு (இ)-யின்படி வகுக்கப்படும் விதிகளை ஒட்டி அதில் வைக்கப்பட்டிருக்கும் பதிவுக்கட்டு, பதிவேடு அல்லது அறி விப்பு எதனையும் ஆய்வு செய்யலாம்; மேலும், இந்தச் சட்டத்தின்

நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக, அவர் தேவையெனக் கருதும் எந்த நபரிடமிருந்தும் அந்த இடத்திலேயே அல்லது பிறவாறாகச் சான்று எடுக்கலாம்;

(இ) இந்தச் சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்குத் தேவைப் படும் பிற அதிகாரங்களைச் செலுத்தலாம்.

(2) பிரிவு 10இன் உட்பிரிவு (2)இன் கூறு (இ)-யின்படி வகுக்கப்பட்ட விதிகளை ஒட்டி வைக்கப்பட்டிருக்கும் பதிவுக்கட்டு, பதிவேடு அல்லது அறிவிப்பு எதனையும் தம் கையடைவில் கொண்டுள்ள நபர் எவரும், ஆய்வாளர் வேண்டுறுத்தும் பொழுது, அதனை முன்விலைப்படுத்துவதற்குக் கட்டுப்பட்டவர் ஆவார் : ஆனால், நபர் எவரும், தம்மை நேரடியாகவோ மறைமுகமாகவோ குற்றத்திற்கு உட்படுத்தும் கேள்விகளுக்குப் பதிலுரைக்குமாறு கட்டாயப்படுத்தப்படுதல் ஆகாது.

தண்டனைகள்.

9. பிரிவு 3, பிரிவு 4 ஆகியவற்றின் வகையங்கள், பிரிவு 5 இன் உட் பிரிவு (1)இன்படி அறிவிக்கை வாயிலாக வேண்டுறுத்தம், பிரிவு 6 இன் படியான வேண்டுறுத்தம், பிரிவு 10இன் உட்பிரிவு (2)இன் கூறு (இ)-யின் படி வகுக்கப் படும் விதிகள் இவற்றை மீறிய நிகழ்வில், அத்தகைய மீறுகை ஏற்பட்டிருக்கும் நிறுவனத்தின் மேலாண்மைக்குப் பொறுப்பு வகிக்கும் நபர் எவரும், அவர் முதல் முறையாகக் குற்றச்செயல் இழைக்கும் நேர்வில், இருபத்தைந்து ரூபாய் வரை யிலும், இரண்டாவது அல்லது பிந்தைய குற்றச் செயல் இழைக்கும் நேர்வில், இரு நூற்று ஐம்பது ரூபாய் வரையிலும் நீடிக்கலாகும் பணத்தண்டம் விதிக்கப்பட்டுத் தண்டனைக்குற்றவர் ஆவார்.

விதிகள்.

10. (1) இந்தச் சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக, மாநில அரசாங்கம் அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாக முன்னரே வெளியீடு செய்து, விதிகளை வகுக்கலாம்.

(2) மேலே கண்ட அதிகாரத்தின் பொதுப்பாங்கிற்குக் குந்தகமின்றி, அத்தகைய விதிகள், குறிப்பாக,—

(அ) பிரிவுகள் 4, 5 ஆகியவற்றைப் பொறுத்தவரை, நம்பகப் பணியிலோ மேலாண்மைப் பணியிலோ அமர்த்தப்பெறுவதற்கான நபர்கள் யார் யார் எனப் பொருள்வரையறை செய்யலாம்;

(ஆ) ஆய்வாளர்கள், தங்கள் அதிகாரங்களைச் செலுத்துதலையும் கடமைகளை ஆற்றுதலையும் முறைப்படுத்தலாம்;

(இ) இந்தச் சட்டம் பொருந்துறும் நிறுவனங்களில் எவ்வாறான பதி வேடுகள், பதிவுக்கட்டுகள் வைக்கப்படவேண்டும் என்றும் எவ்வாறான அறிவிப்பு காட்சிக்கு வைக்கப்படவேண்டும் என்றும் வேண்டுறுத்தலாம்; மேலும் படிவம், அதன் உள்ளடக்கங்கள் இவை எவ்வாறிருக்க வேண்டுமென வகுத்துரைக்கலாம்.

(3) இந்தச் சட்டத்தின்படி மாநில அரசாங்கத்தால் வகுக்கப்படும் விதி ஒவ்வொன்றும், அது வகுக்கப்பட்ட பின்பு, கூடியவிரைவில், சட்டமன்றத்தில் வைக்கப்படுதல் வேண்டும்.

விலக்களிப்பதற்கும் தற்காலிகமாக நிறுத்தி வைப் பதற்குமான அதிகாரம்.

11. மைய அரசாங்கம், தன் கட்டாளுகையின் கீழுள்ள நிறுவனத்தைப் பொறுத்தும், மாநில அரசாங்கம் மாநிலத்தில் உள்ள பிற நிறுவனங்கள் அனைத் தையும் பொறுத்தும், விதிக்கத்தக்கதெனத் தான் கருதுகிற வரைக்கட்டுகளுக்கு உட்பட்டு, இந்தச் சட்டம் பொருந்துறும் நிறுவனம் எதனையும், குறித்துரைக்கப் படும் இந்தச் சட்ட வகையங்கள் அனைத்திலிருந்தும் அல்லது எதனிலிருந்தும் விலக்களிக்கலாம்; மேலும் பொருட்காட்சிகள் அல்லது திருவிழாக்கள் அல்லது அடுத்தடுத்து வரும் பொது விடுமுறை நாட்கள் தொடர்பான சிறப்புக் காலங்களில் இந்தச் சட்டத்தின் செயற்பாட்டினை, குறித்துரைக்கப்படும் காலஅளவிற்கு, தற்காலிகமாக நிறுத்திவைக்கலாம்.